**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 13 of 2017

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.மாதையன்

Date :12.11.2024

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

14) இந்து கூட்டு குடும்பத்தில் உறுப்பினர்கள் பேரில் கிரயம் பெற்ற சொத்துக்கள் குறித்து பாகபிரிவினை பற்றி பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றால் மூதாதையர் சொத்து குறித்து பாகபிரிவினை பற்றி பேச்சு வார்த்தை நடந்தது. மாணிக்கம் என்னிடம் பாகம்பிரித்து தர சொல்லி கேட்கவில்லை. எனது அப்பாவிடம் பாகம் பிரித்து தர சொல்லி கேட்டாரா என்று எனக்கு தெரியவில்லை. ஓ.எஸ். 13/2017 வழக்கு தாக்கல் செய்த காலத்திலே மாணிக்கம் பெயரிலிருந்து சொத்துக்கள் அவருடைய மனைவி பெயரில் மாறியவிவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் என் அம்மாவை ஏன் தரப்பினராக சேர்த்தேன் என்றால் எனக்கும், எனது அம்மாவிற்கும் பாகம் பிரியவில்லை. அதனால் எனது அம்மா எழுதிய பத்திரம் ரத்து செய்ய வேண்டும் என்று வழக்கு போட்டேன். இந்த விவரத்தை எனது தாவாவில் சொல்லியிருக்கிறேன். செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி சார்பதிவாளர் காரிமங்கலம், மாவட்ட பதிவாளர் தருமபுரி 2016ல் மனு கொடுத்தேன். செட்டில்மெண்ட் பத்திரங்களை ரத்து செய்ய சொல்லி வழக்கு போட்டேனா என்றால் பரிகாரம் கேட்டு போட்டதாக நியாபகம்.

15) என் பெயரில் ஒசூரில் ஹசிங்போர்ட்டில் வீடுள்ளது. என் பெயரில் பாலக்கோட்டில் சொத்துக்கள் எதுவும் இல்லை. என்னுடைய சகோதரர்

மணிவேல் பெயரில் பெங்களூரில் அப்பார்மெண்ட் உள்ளது. ஓசூரில் ஹசிங்போர்டு வீடும் உள்ளது. மாணிக்கம் பெயரில் ஓசூரில் ஹசிங்போர்டு வீடு உள்ளது. மாணிக்கம் அவர் பெயரில் சொத்துக்கள் இல்லை என்பதால் அவர் அம்மாவிடம் சொத்துக்கள் கேட்ட போது மற்ற குடும்ப உறுப்பினர்கள் மாணிக்கத்தை ஏமாற்றியதாகவும் என்னுடைய அம்மா அவர் சம்பாதித்த சொத்துக்களை மாணிக்கம் பெயரில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. மாணிக்கத்திற்கு சேலம், தருமபுரி, ஓசூரில் சொத்துக்கள் உள்ளது. மாணிக்கத்தின் மனைவி பெயரில் ஓசூரில் வீடுள்ளது. மாணிக்கத்தின் சொத்துக்கள் எங்கெங்குள்ளது என்று முகவரி சரியாக சொல்ல முடியாது. மாணிக்கம் பெயரில் சொத்துக்கள் இல்லை என்பதால் தான் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. நான், எனது சகோதரர்கள், எனது அப்பா எல்லோரும் மாணிக்கத்திற்கு சொத்துக்கள் கொடுக்காமல் அவரை ஏமாற்றியதால் தான் எனது அம்மா அவருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல.

*16)* ஓ.எஸ்13/2017 வழக்கின் சொத்துக்களில் கூட்டு குடும்ப உறுப்பினர் என்பதால் எனக்கு 1/2 பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் கேட்கும் 1/2 பாகத்தில் எனக்கு, எனது சகோதரர்களுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. அதனால் அசல் வழக்கு 13/2017 வழக்கில் நான் கேட்டுள்ள 1/2 பாகம் குறித்து வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

*17)* ஓ.எஸ்.238/2023 வழக்கு பாக பிரிவினைக்காக போடபட்ட வழக்கு இல்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 3ம் பிரதிவாதி. என் அம்மா செப்டம்பர் 2019ல் இறந்தார். இந்த வழக்கில் Transfer OP எப்போது

போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கில் என்னை வாதியாக சேர்க்க வேண்டும் என்று மனு எதுவும் போடபடவில்லை. அந்த வழக்கில் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு போடப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் மீது என் தாயார் எந்தவிதமான பரிகாரமும் கேட்கவில்லை. மாணிக்கம் பெயரில் உள்ள காழ்புணர்ச்சி காரணமாக என்னுடைய அம்மாவுக்கும் எனக்கும் இருந்த தாய் மகன் உறவை பயன்படுத்தி அவரது அறியாமையை பயன்படுத்தி கொண்டு அவருக்கு தெரியாமல் ஓ.எஸ்.238/2023 வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் வேண்டும் என்பதால் தான் ஒ.எஸ்.13/2017 வழக்கில் எனது அம்மாவிற்கு எதிராக எந்தவிதமான பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

*18)* நான் அந்த வழக்கில் எனது அம்மாவிற்கு எதிராக பாகம் கேட்டுள்ளேன். எனக்கு வேண்டப்பட்ட வழக்கறிஞர் மூலமாக என் அம்மாவை ஏமாற்றி ஒ.எஸ் 13/2017 வழக்கில் பதிலுரை தாக்கல் செய்யவேண்டும் என்று சொல்லி ஒஎஸ்.238/2023 வழக்கு என்னால் போடப்பட்டது என்றால் சரியல்ல. என் அம்மா உயிருடன் இருக்கும் வரை அவா் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்வதாக அறிவிப்பு கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. என் அம்மா உயிருடன் இருக்கும் வரை செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்படவில்லை. என் அம்மா ஏப்ரல் 2019லிருந்து செப்டம்பர் 2019 வரை ICUவில் இருந்தார். தேதி சரியாக நியாபகம் இல்லை. 2019க்கு முன்பாக என் அம்மா செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தாரா என்று எனக்கு தெரியாது. ஓ.எஸ்.238/2023 வழக்கின்

ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. ஒ.எஸ்.238/2023 வழக்கில் என் அம்மா இறந்த பிறகு எனது அம்மாவின் வாரிசுகளாக சேர்க்க வேண்டும் என்றும் எனது அப்பா, எனது சகோதரர்கள் மனு போட்டார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் அப்பா கண்ணு (எ) மாதையன், மணிவேல், மகேந்திரன் வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஒ.எஸ் 238/2023 வழக்கிற்கு எனது அம்மாவின் வாரிசு என்ற அடிப்படையில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். 10ல் 6 பாகம் எனக்கு ஒதுக்கவேண்டும் என்று நீதிமன்ற கட்டணம் கட்டியுள்ளேனா என்றால் கட்டவில்லை. கட்டுகிறேன். ஓஎஸ் 238/2023 வழக்கின் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளதை தவிர என் அம்மாவிற்கு தான் சொத்து பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை.

19) என் அம்மாவின் வயதின் அறியாமையை பயன்படுத்தி அவருக்கு தெரியாமலே ஒ.எஸ்.238/2023 வழக்கில் அவருக்கு தெரியாமல் மாணிக்கம், செல்வி பெயரில் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. என் அம்மா உயிருடன் இருக்கும் வரை இந்த வழக்கை விசாரிக்காமல் என் அம்மாவை நீதிமன்றத்தில் விசாரணை செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் காலம் தாழ்த்தி என் அம்மா இறந்த பிறகு தான் இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நடந்து கொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் மாணிக்கம், செல்வி எனது அம்மாவை ஏமாற்றி செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்ற விவரத்தை ஓஎஸ் 13/2017 வழக்கில் சொல்லவில்லை என்றால் அப்போது எனக்கு எனது அமமா அவர்கள் பெயரில்

செட்டில்மெண்ட் பத்திரம் விருப்பபட்டு எழுதி கொடுத்தாரா என்று தெரியவில்லை. என் அம்மா வழக்கு போட்ட பிறகு தான் செட்டில்மெண்ட் பத்திரம் விருப்பப்பட்டு எழுதவில்லை என்று தெரிந்தது. நான் 2016ல் ஒசூரில் இருந்தேன். எனது அம்மாவுடன் இல்லை. 2016லிருந்து எனது அம்மா இருக்கும் வரை மாணிக்கம் பேரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி கேட்கவில்லை. ஒஎஸ் 238/2023 வழக்கின் பதிலுரையில் உள்ள விவரங்களை எனது அம்மாவை கேட்டு தெரிந்து கொண்டு போட்டேனா என்றால் இல்லை. எனது அம்மா இறந்த பிறகு தான் நான் பதிலுரையை தாக்கல் செய்தேன். ஒ.எஸ்.238/2023 வழக்கில் எனது அம்மா எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். ஒஎஸ் 13/2017 வழக்கில் எனது அம்மாவை 1ம் பிரதிவாதியாகவும் ஒ.எஸ்.238/2023 வழக்கில் என்னை 3ம் பிரதிவாதியாகவும் நான் தான் உள்நோக்கத்துடன் தயார் செய்து வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல.

20) அக்குமாரன் என்பவர் எனது அம்மாவின் தம்பி. அவர் நாகனம்பட்டியில் இருக்கிறார். அவரை நான் ஒஎஸ் 238/2023 வழக்கில் பதிலுரை தாக்கல் செய்வதற்கு முன்பாக பார்க்கவில்லை. அவரால் தான் பிரச்சனை வந்தது. அதை பற்றி நான் என்னுடைய பதிலுரையில் சொல்லவில்லை. அவரை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் எனக்கு தெரியாது. ஒ. எஸ். 238/2023 வழக்கில் எனது அம்மா அக்குமாரை பற்றி என்ன சொல்கியிருக்கிறார் என்று படித்து நான் தெரிந்து கொள்ளவில்லை. 10.03.2016 தேதியில் எனது அம்மா எத்தனை ஆவணங்கள் ஏற்படத்தினார் என்று எனக்கு தெரியாது. ஆவணங்களை ரத்து செய்ய கோரி காரிமங்கலம்

சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்த மனுக்களை தற்போது வரை தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்கிறேன். 1.7.2016ல் எனது அப்பா எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தார். என் அப்பா மாணிக்கம் வீட்டிலிருந்த ஆவணங்களை எடுத்து சென்று விட்டதாகவும் பாகம் பிரிக்க வேண்டும் என்று ஆவணங்களை மீட்டு தரும் படி மனு கொடுத்தார். அந்த புகார் கொடுத்த நகல்களை எனது அப்பா வைத்திருக்கிறார். 10.03.2016 தேதியில் எனது அப்பா புகார் கொடுத்துள்ளார். என் அப்பாவை கூப்பிட்டிருந்தார்கள். ஆனால் விசாரிக்கவில்லை. என் அம்மாவை போலிசார் விசாரித்தார்கள் என்றும் எனது அம்மா விருப்பப்பட்டு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக சொன்னால் வழக்கு பதிவு செய்யவில்லை என்றும் மேற்கொண்டு விசாரிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவின் விருப்பத்திற்கு மாறாக ஒஎஸ் 238/ 2023 வழக்கு போடப்பட்டதால் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. என் பெயரில் புகார் கொடுக்கப்பட்டதால் சஸ்பண்ட் செய்தார்கள் என்றால் சரியல்ல. பாக்கிஸ்தான் எல்லையில் எனக்கு அடிப்பட்டதால் Board Out செய்ய முயற்சித்தார்கள். ஆனால் நான் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு போட்டுதடையுத்தரவு வாங்கினேன். நான் மேல் அதிகாரிகளின் உத்திரவு படி செயல்படாததாலும் ராணுவ விதிகளை மீறியதால் தான் Board Out செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல. அது சம்பந்தப்பட்ட வழக்கு ராணுவ தீர்ப்பாயத்தில் நடைபெறும் என்றால் சரிதான். அந்த நேரத்தில் நான் மல்லிக்கல் கிராமத்தில் இருந்தேன் என்றால் சரியல்ல. சென்னை ஆவடியில் சிஆர்பிஎப் கேம்பில் இருந்தேன். அந்த நேரத்தில் நான் பணியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டு மல்லிக்கல் கிராமத்தில் இருந்தேன் என்றால்

சரியல்ல. என் அம்மா பேரிலும் என் பேரிலும் கூட்டாக பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தின் அசல் ஆவணத்தை நான் பதிவு அலுவலகத்திலிருந்து வாங்கவில்லை. என் அம்மாவிடம் அந்த கிரய ஆவணம் இருந்த போது நான் அதை பார்த்திருக்கிறேன். அந்த கிரய பத்திரத்தில் பேரில் குறைந்த கட்டணம் கட்டியிருப்பதாக நடவடிக்கைகள் நிலுவையில் இருந்ததா என்றால் எதுவும் கிடையாது. எனக்கு வழக்கின் சொத்து விவரங்கள் எதுவும் தெரியாது என்றாலும் வழக்கிற்கு ஏற்றாற் போல் மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் சொத்து விவரங்கள் எனக்கு சரியாக தெரியவில்லை என்றால் சரியல்ல.

21) ஒஎஸ் 238/2023 வழக்கில் நான் 3ம் பிரதிவாதி என்பதால் நீதிமன்றத்தின் அனுமதி பெறாமல் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொத்து விவரம் பற்றி சொல்லியுள்ளது தவறு என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்று கொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல. ஒஎஸ் 238/2023 எனது அம்மாவை ஏமாற்றி நான் தான் அந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கேட்காமல் போடப்பட்ட ஒஎஸ் 238/2023 வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. 10ல் 6 பாகம் கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.